# விருதுநகர் நகராட்சி

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 ம் சோ பகிருது வருடம் ஐப்பசி மாதம் 23 ம் நாள் 2023 ம் ஆண்டு நவம்பர் மாதம் 09.11.2023 ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் இராஜா மாளிகை பெருந்தலைவர் காமராஜர் கூடத்தில் நடைபெறும் அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள் : 1

விருதுநகர் நகராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் ஓராண்டு காலத்திற்கு காலை உணவு வழங்கும் பணிக்கு, மேற்கண்ட திட்டத்தின் நிதி 2023 - 2024-ம் ஆண்டின் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/எம்1, நாள்.28.04.2023 ன்படி, அரசாணை (நிலை) எண்.33 நாள்.07.06.2023 - ன் படியும், மேலும் முதல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்.16.05.2023 மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்.26.05.2023ன் படி, குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்த **M/S உதயா சுயஉதவிக்குழு விருதுநகர்** அவர்களிடம் இருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி நாள்.26.05.2023 ன்படி, மேற்கண்ட பணிக்கு 07.06.2023 தேதியில் வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
இ1/12409/2023

**நகர்மன்ற தீர்மானஎண்:574 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 2

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள இயந்திரங்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் சுத்திகரிப்பு நிலையத்தை தொடர்ந்து இயக்க முடியாமல் சுகாதாரக்கேடு ஏற்படும் சூழ்நிலை வருகிறது.எனவே கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்யவும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள 2023 - 2024 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.13.00/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ1/3102-1/2023

**நகர்மன்ற தீர்மானஎண்:575 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 3

எம் கே சி என்டர்டைன்மெண்ட் நிறுவனத்தின் சார்பாக வருகின்ற 20.12.2023 முதல் 28.01.2024 வரை 40 நாட்கள் இந்நகர் பாவாலி ரோடு, சர்வே வார்டு எண்- 2 பிளாக் எண் -11, சர்வே எண்கள் - 48,49 கல்பள்ளிவாசல் ஜமாத்திற்கு பாத்தியப்பட்ட ஹாஜி சிக்கந்தர் ஹவ்வா பீவி நடுநிலைப்பள்ளி பின்புறம் உள்ள காலியிடத்தில் மக்கள் பயன்பெறும் வகையில் இயந்திர விலங்குகள் கண்காட்சி, இராட்டினங்கள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய பொருட்காட்சி நடத்த இருப்பதாகவும் அதற்கு இந்நகராட்சியின் அனுமதி வழங்கக்கோரி எம் கே சி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற 20.10.2023-ம் தேதிய விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பொருட்காட்சி நடத்துவதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3. மேற்கூறிய கோரிக்கைகளை அரசுக்கு பரிந்துரை செய்யவும் அரசின் பரிந்துரையின்படி செயல்பட ஒப்புதல் வழங்கலாம்.
கோப்பு எண். : 2140/2023/எப்1

**நகர்மன்ற தீர்மானஎண்:576 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 4**

விருதுநகர் வருவாய் வட்டாட்சியர் அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள படி சர்வே வார்டு எண் 2, பிளாக் எண்: 4, நகரளவு எண்: 148/3 நகர நிலப்பதிவேட்டில் சர்க்கார் புறம்போக்கு நடைபாதை என பதிவாகி உள்ளதை திருத்தம் செய்யக்கோரி வரப்பெற்றுளதை தொடர்ந்து நகரசார் ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி விருதுநகர் நகராட்சி சர்வே வார்டு எண்: 2, பிளாக் எண்: 4, நகரளவு எண்: 148/3 நகர நிலப்பதிவேட்டில் சர்க்கார் புறம்போக்கு நடைபாதை என பதிவாகி உள்ளதை திருத்தம் செய்யக்கோரி முருகபூபதி என்பவர் மனு செய்ததின் அடிப்படையில் புலத்தணிக்கை செய்து 19.10.2022 அன்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் ஆரம்ப நில அளவை பதிவேட்டில் நகரளவு எண்: 148 நாகூர் மீரான் இராவுத்தர் என்று முழுப்புலமாக உள்ளது. பின்பு துணை நகர நில அளவையின் போது நகரளவு எண்.148/3 0.00.91.5 ஏர்ஸ் நடைபாதை என பதிவாகியுள்ளது. ஆனால் ஆவண எண் 1598/1928-ன் படி நாகூர்மீரான் இராவுத்தர் நகரளவு எண்: 148-ஐ கிரையம் பெற்றுள்ளதாகவும், பின்னர் 2153/1955-ன் படி நாகூர் மீரான் வாரிசுகள் மூலமாக அங்கம்மாள் கிரையம் பெற்றார். பின்னர் 1366/1968-ன் அங்கம்மாளிடமிருந்து முனியம்மாள் கிரையம் பெற்றுள்ளதாகவும், பின்னர் 37/3/2004-ன் படி உயில் சாசனத்தின் படி முருக பூபதிக்கு கிடைக்கப்பெற்று அனுபவித்து வருவதாகவும், தற்போது நகரளவு எண்: 148/1, 2,3,4,5,6,7,8-ல் வீடுகள், கடைகள் கட்டப்பட்டு இயங்கி வருகிறது என தெரிவித்துள்ளார். எனவே மனுதாரர் கோரிக்கையின் படியும், வட்டாட்சியர் அவர்களின் கடிதத்தின் படியும், நகரளவு எண்: 148/3 சர்க்கார் புறம்போக்கு என உள்ளதை ரயத்து மனை என மாற்றம் செய்வதற்கு மன்றப்பொருள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். : 003429/2023/எப்1

**நகர்மன்ற தீர்மானஎண்:577 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 5**

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:23ல் உள்ள சிவகாமிபுரம் சாலையில், சாய்வுதளம் சேதமடைந்துள்ளதை சரிசெய்யும் பணிக்கு 2023 - 2024 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.1.90/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ1/3101-1/2023

**நகர்மன்ற தீர்மானஎண்:578 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 6**

விருதுநகர் நகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் பாதாள சாக்கடை திட்டம் பயன்பாட்டில் உள்ள Jet rod machine 6000 liters கொள்ளளவு கொண்ட வாகன எண். TN 67 AE 3687க்கு 2023-24-க்குரிய வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு TVS நிறுவனம் மதுரை அவர்களிடமிருந்து வரப்பட்ட பில்பட்டியல் தொகை ரூ191900 க்கு மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது. மேற்கண்ட தொகையினை குடிநீர் நிதியின் கீழ் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: மேற்படி வாகனம் பாதாளசாக்கடை வாகனம் என்பதால் நகர்மன்றத்தலைவர்அவர்களின் முன்அனுமதி (நாள்:08.08.23) பெற்று வேலைஉத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கிகரிக்கலாம். வேலைஉத்தரவு நாள்:01.09.2023
கோப்பு எண்: 0787/2023/இ2

**நகர்மன்ற தீர்மானஎண்:579 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 7

விருதுநகர் நகராட்சியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் புதிதாக திறக்கப்படவுள்ள அறிவுசார் மையம் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.27968/22/தி1 நாள்.28.08.2023 ன்படி, நூல்கள் கொள்முதல் செய்வதற்குரிய செலவின தொகையாக ரூ.10.00/- இலட்சம் மட்டும் கல்வி நிதி 2023 - 2024 ஆம் ஆண்டின் கீழ் கீழ்கண்ட வங்கி கணக்கில் செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கும்.

வங்கிகணக்கு பெயர் : Director of Municipal Adminstration KNMT
வங்கியின் பெயர் : ICICI Bank
வங்கி கணக்கு எண் : 343201000757
MICR குறியீடு : 600229120
IFSC குறியீடு : ICIC0003432

அலுவலகக் குறிப்பு : நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட தொகையினை செலுத்துவதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண் : இ1/4096-3/2021

**நகர்மன்ற தீர்மானஎண்:580 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 8

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 9, தர்காஸ் தெருவில் உள்ள சிறுபாலம் சேதமடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளதால் அதனை சீரமைக்கும் பணிக்கு 2023 - 2024 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.3.00 இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : இ1/3100/2023

**நகர்மன்ற தீர்மானஎண்:581 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 9

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:30ல் உள்ள காமராஜர் சாலையில் அமைந்துள்ள சிறு பாலங்கள் மற்றும் கழிவுநீர் வாய்கால் சேதமடைந்த நிலையில் உள்ளது. இதனால் கழிவுநீர் மற்றும் மழைநீர் முறையாக செல்ல வழியில்லாமல் சுகாதார சீர்கேடு ஏற்படும் வகையில் உள்ளது, பொது மக்களுக்கு இடையூறு விளைவிப்பதாகவும் உள்ளதால் அதனை சீரமைக்கும் பணிக்கு 2023 - 2024 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.10.20/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : இ1/3101/2023

**நகர்மன்ற தீர்மானஎண்:582 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 10

விருதுநகர் நகராட்சி பொறியியல் பிரிவிற்கு சொந்தமான டாட்டா TN 67 AF 8139 JD மண் அள்ளும் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சீர்செய்ய ஆகும் செலவினத் தொகையை 2023 - 2024 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.20,000 மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : இ2/2031/1 /2023

**நகர்மன்ற தீர்மானஎண்:583 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 11

விருதுநகர் நகராட்சி 2023-2024 ஆம் ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான பல்வகைப்பட்ட கணினி இரசீதுகள் அனைத்து வகையான பதிவேடுகள், அனைத்து வகையான படிவங்கள், ஜெராக்ஸ் மிஷின் டோனர்கள், கணினிக்கு தேவையான அனைத்து வகையான டோனர்கள் Log Book A4 பேப்பர்கள் மற்றும் Legal size பேப்பர்கள் அரசு சார்பு நிறுவனமான The Melagaram Printing Workers Industrial Co-operative Society Limited, Tenkasi- மூலம் கொள்முதல்

செய்தவற்கு ஆகும் செலவினம் ரூ.15,00,000/- (ரூபாய் பதினைந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

ந.க.எண்: 13645/2023/பி3.
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மானஎண்:584 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 12

விருதுநகர் நகராட்சியில் குடிநீர் விநியோகம் ஆணைக்குட்டம் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் இதர நீரேற்று நிலையங்களில் இயக்குதல், பேணுதல் மற்றும் பாதாளசாக்கடை திட்டத்தில் உள்ள கழிவுநீர் பைப்புகளில் அடைப்புகளை சீர்செய்யும் பணிக்கு பணியாளர்களை ஒப்பந்த (OUT SOURCING) அடிப்படையில் பணியமர்த்துதல் (8 நபர்கள்)

**மொத்த பணியாளர்கள்:**

| | |
|---|---|
| காவலர் | - 3 நபர்கள். |
| மோட்டார் ஆப்ரேட்டர் | - 2 நபர்கள். |
| தொகுதியாள் | - 3 நபர்கள். |
| **மொத்தம்** | **- 8 நபர்கள்** |

மேற்கண்ட பணிக்கு ஓராண்டுக்கு வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் பணியமர்த்தி கழிவுநீர் அகற்றுதல் மற்றும் சுத்தம் செய்தல் தொடர்புடைய கட்டடைப்புகளை இயக்கி பராமரித்தல் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு ந.க.எண்.இ2/4862/2021 நாள்.06.03.2023-ன் படி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. எனவே அனுமதி வரும் வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரருக்கு பணியினை நீட்டிக்க மற்றும் 2023 - 2024 ஆம் ஆண்டு மீதமுள்ள 6 மாத காலத்திற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.7.00 இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் வெளிக்கொணர்வு தொடர்பான அனுமதி வரும் வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரருக்கு பணியினை நீட்டிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்:இ2/4300/2021

**நகர்மன்ற தீர்மானஎண்:585 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 13

விருதுநகர் நகராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் செயல்படுத்துவதற்காக வண்டிகளின் மூலம் பள்ளிகளில் காலை உணவுகளை விநியோகிப்பதற்கு விளம்பர பலகை மூலம் தெரிவிப்பதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/எம்1, உள்ள வழிகட்டுதலின் படியும் மற்றும் ந.கஎண். 17404/2022/எம்1 நாள்.17.08.2023 உள்ள கடிதத்தின் படியும், காலை உணவு எடுத்து செல்லும் வாகனத்தில் விளம்பர பலகை (3 எண்ணம்) மற்றும் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்பட்ட எட்டு நகராட்சி பள்ளியில் தலா 1எண்ணம் மொத்தம் (8 எண்ணம்) கொண்ட விளம்பர பலகை செய்வதற்கு செலவினம் ரூ.55,000/- மட்டும் மதிப்பீட்டில், 2023 - 2024 ஆம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மேற்கண்ட பணிக்கு நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.18.08.2023 - ன்படி விலைப்புள்ளி கோரப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
ந.க.எண் : இ1/2022/2023

**நகர்மன்ற தீர்மானஎண்:586 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 14

விருதுநகர் நகராட்சி பொது சுகாதாரம் பிரிவில் அந்தந்த பகுதிகளில் சுகாதார பணிகள் மேற்கொண்டதற்கு தேவைப்படும் தளவாட சமான்கள் கொள்முதல் செய்வதற்கு அனுமதியும் அதற்குண்டான செலவு ரூ.5.00 லட்சம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விபரம் | | எண்ணம் |
|---|---|---|---|
| 1. | மண்வெட்டி | : | 40 எண்ணம் |
| 2. | மூங்கில் மாறு | : | 40 எண்ணம் |
| 3. | தென்னங்குச்சி மாறு | : | 250 எண்ணம் |

| | | | |
|---|---|---|---|
| 4. | தட்டு | : | 25 எண்ணம் |
| 5. | அன்னகூடை | : | 25 எண்ணம் |
| 6. | அகப்பை (ஜோடி) | : | 50 எண்ணம் |
| 7. | மண் அள்ளும் பிரஸ் | : | 50 எண்ணம் |
| 8. | முள்கம்பி (சீசர்) | : | 20 எண்ணம் |
| 9. | வெட்டு அரிவாள் | : | 10 எண்ணம் |
| 10. | மூங்கில் கூடை | : | 20 எண்ணம் |
| 11. | கையோடு | : | 50 எண்ணம் |
| 12. | கரண்டி | : | 25 எண்ணம் |
| 13. | வாறுகால் முள்கம்பி (நீளமானது) | : | 50 எண்ணம் |
| 14. | பண்ணை அரிவாள் | : | 50 எண்ணம் |
| 15. | சவல் | : | 10 எண்ணம் |
| 16. | பினாயில் (கருப்பு) | : | 60 லிட்டர் |
| 17. | கடப்பாறை | : | 10 எண்ணம் |

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மானஎண்:587 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 15**

விருதுநகர் நகராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் காலை சிற்றுண்டி வழங்கும் பணி சமையல் பரிமாறும் பொறுப்பாளர் கீழ்கண்டவாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

| வ. எண் | நகராட்சி பள்ளியின் பெயர் | **I-V வகுப்பு மொத்தம் மாணவர்களின் எண்ணிக்கை** | **சமையல் பரிமாறும் பொறுப்பாளர்களின் எண்ணிக்கை (நபர்கள்)** |
|---|---|---|---|
| 1 | அ.ச.பா.சி.சி நகராட்சி தொடக்க மற்றும் உயர்நிலை பள்ளி | 51 | 1 |
| 2 | செந்தில்குமார் மீனாட்சி அம்மாள் நகராட்சி நடுநிலைப் பள்ளி | 42 | 1 |
| 3 | பாவாலி ரோடு முஸ்லீம் நகராட்சி நடுநிலைப் பள்ளி | 292 | 3 |
| 4 | கே.சி.எஸ்.டி நகராட்சி நடுநிலைப் பள்ளி | 22 | 1 |
| 5 | எம்.எஸ்.பி.எஸ் நாடார் நகராட்சி நடுநிலைப்பள்ளி | 18 | 1 |
| 6 | இராவ்பகதூர் எம்.எஸ். பி.எஸ்.தொடக்க மற்றும் உயர்நிலை பள்ளி | 40 | 1 |
| 7 | இராமமூர்த்தி சாலை நகராட்சி நடுநிலைப் பள்ளி | 22 | 1 |
| 8 | சிவன்கோவில் தெரு நகராட்சி நடுநிலைப் பள்ளி | 8 | 1 |
| | மொத்தம் | 495 | 10 நபர்கள் |

மேற்படி, காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் 2023-2024 ஆம் ஆண்டின் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/எம்1, நாள்.28.04.2023 ன்படி, அரசாணை (நிலை) எண்.33 நாள்.07.06.2023 - ன் படியும், பள்ளிகளில் உணவு பரிமாறும் பணியாளர்களுக்கு CMBFS நிதியின் மூலமாக மாதந்தோறும் ரூ.1500/- மதிப்பூதியமாக வழங்கப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பொருள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். CMBFS நிதி வழங்க தாமதமாகும் போது நகராட்சியின் கல்வி நிதியின் மூலம் வழங்கி CMBFS நிதி பெறப்படும் போது நகராட்சி கல்வி நிதிக்கு ஈடு செய்யலாம்.

இ1/12409/2023

**நகர்மன்ற தீர்மானஎண்:588 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 16

விருதுநகர் நகராட்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் செயல்படுத்துவதற்காக வண்டிகளின் மூலம் பள்ளிகளில் காலை உணவுகளை விநியோகிப்பதற்கு விளம்பர பலகை மூலம் தெரிவிப்பதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/எம்1, உள்ள வழிகட்டுதலின் படியும் மற்றும் ந.கஎண். 17404/2022/எம்1 நாள்.17.08.2023 உள்ள கடிதத்தின் படியும், காலை உணவு எடுத்து செல்லும் வாகனத்தில் விளம்பர பலகை (3 எண்ணம்) மற்றும் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்பட்ட எட்டு நகராட்சி பள்ளியில் தலா 1எண்ணம் மொத்தம் (8 எண்ணம்) கொண்ட விளம்பர பலகை செய்யவதற்கு செலவினம் ரூ.55,000/- மட்டும் மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு, இந்நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.18.08.2023 இல் பெறப்பட்டுள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 21.08.2023-இல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.மகா கம்யூனிகேசன்ஸ் விருதுநகர். | 52,864.00 |
| 2. | திரு.கிங்கிரியேசன்ஷ் விருதுநகர் | 73,514.00 |
| 3. | திரு. வர்சா டிரேடர்ஸ் விருதுநகர் | 65,254.00 |

**அலுவலக குறிப்பு :**

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக்காட்டிலும் குறைவாக அளித்துள்ள **திரு.மகா கம்யூனிகேசன்ஸ் விருதுநகர்.** அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

இ1/2022/2023

**நகர்மன்ற தீர்மானஎண்:589 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 17

விருதுநகர் நகராட்சி பொது நிதி 2023-2024 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் டாட்டா JD மண் அள்ளும் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சீர் செய்ய ஆகும் செலவினம் ரூ.20,000/- மட்டும் மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு, இந்நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி நாள்.13.09.2023-ன் படி அனுமதி அளித்துள்ளார். அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 19.09.2023-இல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டன. அன்றைய தேதியில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஸ்ரீ முனியம்மாள் காட்டேஜ் இன்டஸ்ரீஸ் விருதுநகர். | ரூ.19,000/- |
| 2. | G.k லேத் ஒர்க்ஸ் விருதுநகர் | ரூ.21,800/- |
| 3. | M.கார்த்திகேயன் விருதுநகர் | ரூ.18,408/- |

**அலுவலக குறிப்பு :**

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் குறைவாக அளித்துள்ள **திரு.M.கார்த்திக்கேயன் ஒப்பந்ததாரர் விருதுநகர்.** அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மேலும் நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

இ2/2031-1/2023.

**நகர்மன்ற தீர்மானஎண்:590 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 18

விருதுநகர் நகராட்சி அலுவலகம் மற்றும் வரி வசூல் மையத்திலும் உள்ள 1 KVA UPS 15 எண்ணம் பேட்டரி பழுதான நிலையில் இயங்கி வருகிறது. அனைத்து பேட்டரியும் காலாவதியாகிவிட்டதால் Backup இன்றி மின்தடை நேரங்களில் off ஆகிவிடுகிறது. வரிவசூல் மையம் உட்பட 12 கணினிகள் UPS இன்றி இயங்குகிறது.

எனவே15 UPS களுக்கும் 2 பேட்டரி விதம் 30 எண்ணம் பேட்டரி மாற்றிடவும் புதிதாக 12 எண்ணம் 1 KVA UPS வாங்கும் பணிக்கு பொது நிதியில் 2023 - 2024-ம் ஆண்டின் கீழ் **ரூ.1.70/- இலட்சம்** மட்டும் மதிப்பீட்டில் செலவினங்களை மேற்கொள்வதற்கு, இந்நகர் மன்றத் தீர்மான எண்.386 நாள்.28.03.2023-ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 19.10.2023-இல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன அன்றைய தேதியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | VASP information technology virudhunagar | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.25 சதவிகிதம் குறைவு. |
| 2. | Star Computer Service Virudhunagar. | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.53 சதவிகிதம் மிக குறைவு |

**அலுவலக குறிப்பு :**

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு விலைக் காட்டிலும் **0.53%** மிககுறைவாக அளித்துள்ள **Star Computer Service Virudhunagar.** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
இ1/12484/2022

**நகர்மன்ற தீர்மானஎண்:591 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 19

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும் ஆங்காங்கே சேதமடைந்த நிலையில் தார் சாலைகள் உள்ளது இது அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு சிரமம் ஏற்படும் வகையில் உள்ளது சரிசெய்யும் பணிக்கு 2023 - 2024 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.9.90 இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ1/3794-1/2023

**நகர்மன்ற தீர்மானஎண்:592 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 20

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும் ஆங்காங்கே சேதமடைந்த நிலையில் பேவர் பிளாக் சாலைகள் உள்ளது இது அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு சிரமம் ஏற்படும் வகையில் உள்ளது சரிசெய்யும் பணிக்கு 2023 - 2024 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.9.90 இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ1/3793-1/2023

**நகர்மன்ற தீர்மானஎண்:593 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 21

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 35.ல் உள்ள சிவந்திபுரம் ஆத்துமேடு பகுதியில் கழிவுநீர் வாய்கால் சரிந்து விபத்து ஏற்படும் நிலையில் உள்ளது. பொதுமக்களின் நலன் கருதி சேதமடைந்த கழிவுநீர் கால்வாயை சீரமைக்கும் பணிக்கு 2023 - 2024 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.3.30 இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மானஎண்:594 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

கோப்பு எண் : இ1/3792-1/2023

## பொருள் : 22

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 36 வார்டு பகுதிகளில் தாழ்வான இடங்களில் சேகரமாகும் மழைநீரை அப்புறப்படுத்துவதற்கும் மற்றும் பருவகாலம் தொடங்கியதால் மழை நேரங்களில் முறிந்து விழும் மரங்களை அப்பறப்படுத்துவதற்கும் தளவாடசாமான்கள்

தேவைப்படுவதால் விநியோகம் செய்யும் பணிக்கு 2023 - 2024 ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.5.00 இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : இ1/3790-1/2023

**நகர்மன்ற தீர்மானஎண்:595 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

நகர்மன்ற தலைவர்
விருதுநகர் நகராட்சி

# விருதுநகர் நகராட்சி

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 ம் சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 14 ம் நாள் 2023 ம் ஆண்டு நவம்பர் மாதம் 30.11.2023 ம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் இராஜா மாளிகை பெருந்தலைவர் காமராஜர் கூடத்தில் நடைபெறும் சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

**பொருள் : 1**

நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் செப்டம்பர் - 2023 ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண் : 3431/2021/சி1

**நகர்மன்ற தீர்மானஎண்:596 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 2**

விருதுநகர் நகராட்சிக்கு உட்பட்ட பாவாலி ரோடு, முஸ்லீம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் இடத்தின் தன்மைக்கேற்ப் பணிகள் மேற்கொண்டதில் மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளதை விட (கல்வி நிலையமாக இருப்பதால்) கூடுதலாக பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் கூடுதலாக ஆகும் செலவினம் ரூ.9.20 இலட்சத்திற்கும், அதனை 2023 - 2024 ஆம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :மேற்கண்ட பணி கல்வி நிலைய பணியாக இருப்பதாலும் பணியினை விரைவாக முடிக்க வேண்டியுள்ளதாலும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : இ1/12876/2023

**நகர்மன்ற தீர்மானஎண்:597 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 3**

விருதுநகர் நகராட்சியில் பாதாள சாக்கடைத்திட்டம் 22 வார்டுகளில் முழுமையாகவும்,14 வார்டுகளில் பகுதியாகவும் மேற்கொள்ளப்பட்டது. மேலும் 2 கழிவு நீர் உந்துநிலையங்கள் 7 கழிவுநீரேற்று நிலையங்கள் மற்றும் 7.65 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. இந்நிலையில் கழிவுநீர் சேகரிக்கும் அமைப்புகளில் ஆங்காங்கே குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளத்தில் முழுமையாக பணிகள் மேற்கொள்ளப்படாததாலும் சுத்திகரிப்பு நிலையம், உந்து நிலையங்கள், நீரேற்று நிலையங்களில் உள்ள மின்மோட்டார்கள் பழுதடைந்து இயக்க முடியாத நிலையும் உள்ளதால் பொது மக்களுக்கு அடிக்கடி சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. எனவே விடுபட்ட பணிகளை முழுமையாக முடிக்கவும் சேகரிக்கும் அமைப்பு மற்றும் நிலையங்களில் ஏற்படும் பழுதுகளை முழுமையாக சீர் செய்யவும் திட்ட அறிக்கை தயார்செய்து சமர்ப்பிக்க கலந்தாலோசகர் நியமிக்கவும் ,அதற்கான செலவினம் (1.5% திட்ட மதிப்பிட்டில்) 2023 - 2024 ஆம் ஆண்டு குடிநீர்மற்றும்வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டி மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

கோப்பு எண்: 4079/E2/2023

**நகர்மன்ற தீர்மானஎண்:598 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 4**

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 6 ல் இந்திரா நகர் மாணிக்கம் தெரு ஆகிய பகுதிகளில் சிறுபாலங்கள் உடைந்து பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் நிலையில்

இருப்பதால் சிறுபாலங்களை சீர்செய்யும் பணி 2023 - 2024 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.7.30/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
கோப்பு எண்: 4010/E2/2023

**நகர்மன்ற தீர்மானஎண்:599 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 5**

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அறிவியல் மற்றும் தொழில்நுட்பபூங்கா அமைக்க உத்தேசிக்கப்பட்டதில் அதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியினை கலந்தாலோசகர் மூலம் மேற்கொள்ளவும் செலவினை நகராட்சி 2022-2023 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
கோப்பு எண்:4010-1/E2/2023

**நகர்மன்ற தீர்மானஎண்:600 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 6**

விருதுநகர் நகராட்சியில் பாதாளசாக்கடை திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளான மின்மோட்டார்களை இயக்குதல், ஆய்வக உதவியாளர் மற்றும் காவலர்கள் ஆகிய பணியாளர்களை (8 நபர்கள்) ஒப்பந்த (OUT SOURCING) அடிப்படையில் பணியமர்த்துதல்

**மொத்த பணியாளர்கள்:**

| | |
|---|---|
| ஆய்வக உதவியாளர் | - 1 நபர். |
| மேற்பார்வையாளர் | - 1 நபர். |
| மோட்டார் ஆப்ரேட்டர் | - 4 நபர்கள். |
| காவலர்கள் | - 2 நபர்கள். |
| **மொத்தம்** | **- 8 நபர்கள்** |

மேற்கண்ட பணிக்கு ஓராண்டுக்கு வெளிக்கொணர்வு முகமை (Outsource) மூலம் பணியமர்த்தி கழிவுநீர் அகற்றுதல் மற்றும் சுத்தம் செய்தல் தொடர்புடைய கட்டடைப்புகளை இயக்கி பராமரித்தல் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு ந.க.எண்.இ2/4862/2021 நாள்.06.03.2023-ன் படி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. எனவே அனுமதி வரும் வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரருக்கு பணியினை நீட்டிக்க மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நிர்ணயிக்கப்பட்ட தற்போதைய தர விலை பட்டியலின் படி தொகையினை 2023 - 2024 ஆம் ஆண்டு மீதமுள்ள 6 மாத காலத்திற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.9.00 இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் வெளிக்கொணர்வு தொடர்பான அனுமதி வரும் வரை ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நிர்ணயிக்கப்பட்ட தற்போதைய தர விலை பட்டியலின் படி தொகையினை வழங்க மற்றும் பணியினை நீட்டிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்:இ2/1270/2021

**நகர்மன்ற தீர்மானஎண்:601 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 7**

விருதுநகர் நகராட்சியின் 2022-2023 ஆம் ஆண்டிற்கான வருவாய் மூலதனநிதி, குடிநீர் வடிகால் நிதி, ஆரம்ப கல்வி நிதி கணக்குகளை பட்டய கணக்கர் திரு.சீனிவாசன் அவர்களை வைத்து தணிக்கை செய்து முடிவு செய்வதற்குண்டான செலவினம் ரூ.40,000/-க்கு மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண்:7057/2022/பி1

**நகர்மன்ற தீர்மானஎண்:602 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

நகர்மன்றதலைவர்
விருதுநகர் நகராட்சி